போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-A பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 28, 1922.

நெ. 9.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் பெப்ரவரிமீ 28உ. [விலை, 6 பை.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

Tamil Translations of Notifications by Government.

லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1921-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 30உ.

நெ. 901.—1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 349-வது பிரிவைச்சேர்ந்த (25) குறிப்பிட்ட பகுதியின்படி, சென்னையில் மனிதர்களுக்காவது பிராணிகளுக்காவது அபாயகரமான வியாதிகள் காணுமல் தடுப்பதற்காக சென்னை நகர் விசாரணைச் சங்கத்தாரால் செய்யப்பட்டு, 352-வது பிரிவின்படி கவர்ன்மெண்டாரால் ஜாரிசெய்யப்பட்ட அடியிற்கண்ட சகாயச்சட்டங்கள் யாவர்க்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகின்றன :—

மனிதர்களுக்காவது பிராணிகளுக்காவது அபாயகரமான வியாதிகள் காணுமல் தடுப்பதற்காக 1919-ம் வருஷத்து 4-வது ஆக்டாகிய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 349-வது பிரிவைச்சேர்ந்த (25) குறிப்பிட்ட பகுதியின்படி செய்யப்பட்ட சகாயச்சட்டங்கள்.

அபாயகரமான வியாதி கண்டு இறந்துபோனவர்களின் பிரேதங்களை 24 மணி நேரத்துக்குள் தகனஞ்செய்துவிடவாவது புதைத்துவிடவாவது வேண்டுமென்பது.

1. யாதொரு அபாயகரமான வியாதி கண்டு இறந்துபோய் விட்டிருக்கும் யாதொரு நபரின் பிரேதத்தை, ஹெல்த் ஆபிஸரிடமிருந்து பிரத்தியேகமாய் அனுமதி பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, இருபத்தினன்கு மணிநேரத்துக்குள் புதைத்துவிடவாவது தகனஞ்செய்துவிடவாவது வேண்டும்.

அப்படிப்பட்ட பிரேதங்களை வாசஸ்தலங்களுக்குக் கொண்டுபோகக் கூடாதென்று தடுப்பது.

2. அப்படிப்பட்ட பிரேதமானது ஆஸ்பத்திரியிலிருந்தால், அதை புதைப்பதற்கான அல்லது தகனஞ்செய்வதற்கான இடமல்லாத வேறே எந்த இடத்துக்கும் கொண்டுபோகக்கூடாது.

தொத்துவியாதி கண்டு இறந்து போனவர்களைப் பொதுஜனங்கள் ஏறும்படியான வண்டிகளில் கொண்டுபோகக கூடாதென்று தடுப்பது.

3. தொத்துவியாதி கண்டு இறந்துபோனவர்களை (பிரேத வண்டியல்லாமல் வேறே) பொது ஜனங்கள் ஏறும்படியான எந்த வண்டியிலும் கொண்டுபோகக்கூடாது.

அடைப்பான் முதலிய வியாதிகள் கண்டு இறந்துபோன பிராணிகளின் தேகங்களை அறுக்கக்கூடாதென்பது.

4. (ஆன்த்ராக்ஸ்) அடைப்பான், (ரிண்டர்பெஸ்ட்) வெக்கை என்னும் கால்நடைப் பெருவாரி கண்டு இறந்துபோன பிராணிகளின் தேகங்களை எந்த சந்தர்ப்பங்களிலும் அறுக்கக் கூடாது.

கொல்லப்பட்ட பிராணிகளின் மாமிசத்தையாவது, பதனிடாத ஆட்டுத்தோல் அல்லது மாட்டுத்தோல் முதலியவைகளையாவது ஒரு இடத்திலிருந்து வேறோரிடத்துக்குக் கொண்டுபோகும்போது திறந்துவைக்கக்கூடாதென்று தடுப்பது.

5. எந்த நபரும் - கொல்லப்பட்ட பிராணிகளின் மாமிசத்தையாவது, கொல்லப்பட்ட பிராணிகளின் பச்சை மாமிசத்தையாவது, பதனிடாத ஆட்டுத்தோல் அல்லது ஆட்டுத்தோல் முதலியவைகளையாவது பதனிடாத மாட்டுத்தோல் அல்லது மாட்டுத்தோல் முதலியவைகளையாவது ஒரு இடத்திலிருந்து வேறோரிடத்துக்குக் கொண்டுபோகும்போது பொது ஜனங்களின் கண்களில் படும்படி திறந்து வைக்கவுங்கூடாது, திறந்துவைக்கும்படிச் செய்யவுங்கூடாது.

அழுக்குத் துணிகளையும் சலவைசெய்த துணிகளையும் தனித்தனியாய் வைத்துவைக்க வேண்டுமென்பது

6. வண்ணாரவேலை செய்வதற்காக உபயோகிக்கப்படும் யாதொரு வளவில் அழுக்குத்துணிகளையும் சலவைசெய்த துணிகளையும் தனித்தனியான அறைகளில் சேர்த்து வைக்கவேண்டும்.

ஜலசர்ப்பராவுக்கு ஆதாரமாயுள்ள இடத்தில் அழுக்குத்துணிகளைத் தோய்க்கக்கூடாதென்பது.

7. அழுக்குத்துணிகளை ஜலசர்ப்பராவுக்கு ஆதாரமாயுள்ள இடத்தில் தோய்க்கக்கூடாது.

தொத்துவியாதி சம்பந்தம் ஏற்பட்ட வீட்டிலிருந்து கொண்டுவரும் அழுக்குத்துணிகளை அவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதற்குமுன் தோய்க்கக்கூடாதென்பது.

8. அபாயகரமான தொத்துவியாதி கண்டிருக்கும் வீட்டிலிருந்து வண்ணான் அழுக்குத்துணிகளைத் தெரிந்திருந்தும் எடுத்துக்கொண்டு போகவுங்கூடாது, அப்படிப்பட்ட வீட்டின் சொந்தக்காரராவது அதில் குடியிருக்கும் யாதொரு நபராவது துணிகளைத் தெரிந்திருந்தும் தோய்ப்பதற்காக வண்ணானிடத்தில் போடவுங்கூடாது ; ஆனால், ஹெல்த் ஆபிஸருக்குத் திருப்திகரமாக அந்தத் துணிகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தம் நீக்கிவிடப்பட்டபிறகு அந்தப்படி செய்யலாம்.

தன்னுடைய வளவில் தொத்து வியாதி கண்டால் வண்ணான தன்னுடைய தொழிலைச் செய்யக்கூடாதென்பதும், ஷை வளவில தொத்துவியாதி சம்பந்தம் இல்லையென்று ஹெல்த் ஆபிஸர் ஸெர்டிபை செய்தபிறகு தன்னுடைய வேலையை மறுபடியும் செய்யத் தொடங்கலாமென்பதும்.

9. தன்னுடைய வளவில் அபாயகரமான யாதொரு தொத்துவியாதி காணுகிறபட்சத்திலே வண்ணான் தன் தொழில் செய்வதை நிறுத்திவிடவேண்டும ; மேலும, அவன் - ஷை வளவில் தொத்துவியாதி சம்பந்தம் கிடையாதென்று ஹெல்த் ஆபிஸர் உறுதிமொழி கூறுகிறவரையில் தன்னுடைய தொழிலை மறுபடியும் செய்யத் தொடங்கக்கூடாது.

10. தன்னுடைய வளவில் அபாயகரமான யாதொரு தொத்துவியாதி காணுவதன் மேல், அவன் தன்னுடைய வீட்டிலிருக்கும் சகல துணிகளையும் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக்கொடுக்க ஹெல்த் ஆபிஸரின் எழுத்துமூலமான அனுமதி கிடைக்கிறவரையில், அவைகளைத் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

தொத்து வியாதி கண்டு இறந்து போனவர்களின் பிரேதப்பெட்டியின் மேல் மூடின துணிகளைக் கொளுத்திவிட வேண்டுமென்பது.

11. ஒட்டுவியாதி அல்லது தொத்துவியாதி கண்டு இறந்துபோய் பிரேதப்பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் யாதொரு நபரை மூடுவதற்காக உபயோகிக்கப்பட்ட எந்தத் துணியையும் அப்போதே கொளுத்திவிடவேண்டும்.

குஷ்டரோகம் முதலியவை கண்டிருக்கும் நபாகள் வண்ணாரவேலை செய்யக்கூடாதென்பது.

12. யாதொரு குஷ்டரோகியாவது யாதொரு திறந்தலையான ரணத்தினாலாகிலும் யாதொரு அருவருக்கத்தக்க வியாதி ஒட்டுவியாதி அல்லது தொத்து வியாதியினாலாகிலும் பீடிக்கப்படும் யாதொரு நபராவது வண்ணாரவேலை செய்யவுங்கூடாது; அப்படிப்பட்ட நபரை மேற்படி வேலைக்கு வைத்துக்கொள்ளவுங்கூடாது, அவர் அந்த வேலைக்கு உதவி செய்யவுங்கூடாது.

தண்டனை.

13. இந்த சகாயச்சட்டங்களில் எதையாவது யாதொரு நபர் மீறிநடக்கும்பட்சத்தில், அவருக்கு ஐம்பது ரூபாய்வரையில் அபராததண்டனை விதிக்கப்படும் ; மேலும், முதல் தடவை மீறி நடந்ததாகக் குற்றஸ்தாபனை செய்யப்பட்டபிறகு மீறிநடந்துகொண்டேயிருந்தால், அந்தப்படி மீறி நடந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் பதினைந்து ரூபாய்வரையில் அபராத தண்டனையாவது, அந்தப்படி மீறிநடப்பதை விட்டுவிடவேண்டுமென்று கம்மிஷனரிடமிருந்து நோடிஸ் வரப்பெற்றுக்கொண்டபிறகு மீறி நடந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் பத்துரூபாய் வரையில் அபராததண்டனையாவது விதிக்கப்படும.

எப். ஜெ. ரிச்சர்ட்ஸ்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.